சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.29/2018

**PW 1 ராதாகிருஷ்ணன்** **09.02.2024**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து வண்ணாமடை அருகில் நடைபெற்றது. நான் விபத்து சமயம் டாடா ஏஸ் வாகனம் ஓட்டிச்சென்றேன். அந்த வாகனத்தின் சேதத்திற்காக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்தில் சாலையில் வாகனத்தை நிறுத்தி பொருட்களை ஏற்றிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல, சற்று உள்ளே தள்ளி நிறுத்தித்தான் ஏற்றிக்கொண்டிருந்தேன். நான் வாகனத்தை உள்ளே தள்ளி வாகனத்தை நிறுத்தியிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றாலும் என் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டதைப் பொறுத்து சர்வேயர் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனத்தை இன்னும் பழுது பார்க்கவில்லை என்றால் சரிதான். வாகன சேதத்திற்கான பில்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், கொட்டேசன் மட்டும் கொடுத்துள்ளேன். வாகனத்தை என்னுடைய பொறுப்பில்தான் வைத்துள்ளேன் என்றால் சரிதான். என் வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் நான் இழப்பீடு எதுவும் கோரவில்லை. எனது வாகனத்தை எந்த காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு பெற்றுள்ளேன் என தெரியவில்லை. காப்பீட்டு சான்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வாகனத்தின் மதிப்பு எவ்வளவு என காப்பீட்டுச்சான்றில் குறிப்பிட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான். என் வாகனம் 2007 மாடலாகும். விபத்து 2016 ல் நடைபெற்றது. 10 வருடத்திற்கும் மேலாகிவிட்டதால் என்

வாகனத்தின் மதிப்பு மிகவும் குறைந்து ரூ.1 லட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. என் வாகனத்திற்கு செலவு செய்ததற்கான பில்களை தாக்கல் செய்யாத காரணத்தால் தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் மனுவில் கேட்டுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாகனம் முழுவதும் சேதமானதால் அதை எடைக்கு போட்டு அதில் வரும் தொகையை கழித்துதான் நான் நீதிமன்றத்தில் நஷ்டஈடு தொகையை கேட்க முடியும் என்றாலும் என் வாகனத்தையும் வைத்துக்கொண்டு தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் கேட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

சேதமான வாகனத்தை எடைக்கு போட்டால் ரூ.15000/- கிடைக்கும்.

**மீண்டும் குறுக்கு விசாரணை**

சேதமான வாகனத்தை எடைக்கு போட்டால் ரூ.15000/- கிடைக்கும் என நான் தோராயமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி